கூட்டுறவு தேர்தல் / மிக அவசரம்

ஐயா,

ந.க.92/2013/CE-5 நாள். 27.03.2013

பொருள்: கூட்டுறவு தேர்தல் – கூட்டுறவுச்சங்கங்களின் நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கான தேர்தல்கள் – பதவி வழித் தலைவர் Ex-Offcio President – சில அறிவுரைகள் – வழங்கப்படுகின்றன.

*****

சங்கத் துணைவிதிகளின்படி பதவி வழித் தலைவர் (Ex-Officio President) இருந்தால் அவரை நீக்கி (Exclude), இதர உறுப்பினர்களுக்கு மட்டும்தான் தேர்தல் நடைபெற வேண்டுமா என்று மாவட்ட தேர்தல் அலுவலர் பயிற்சியின் போதும் மாநிலத் தேர்தல் அலுவலர்களின் கூட்டத்தின்போதும் சந்தேகம் எழுப்பப்பட்டது.

பிரிவு 2 (18)ல் நிர்வாகிகள் என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர், துணைத்தலைவர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. சட்டப்பிரிவு 33 (3)ன்படி தொடக்க கூட்டுறவுச் சங்கத்தில் நிர்வாகக் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை 7 முதல் 21 வரை இருக்கும் என்றும் சட்டப்பிரிவு 33(1) (a)ன்படி சட்டம், விதி மற்றும் துணை விதியில் சொல்லப்பட்டபடி நிர்வாகக்குழு அமையும் என்றும், அதன் முதல் காப்பு வாசகத்தில் மொத்த உறுப்பினர்களில் 30% பெண்களுக்கும் 18% ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கும் இடங்கள் ஒதுக்கீடு இருக்க வேண்டும் என்றும், இரண்டாம் காப்பு வாசகம் மற்றும் மூன்றாம் காப்பு வாசகங்களில் முறையே இசைந்து தேர்ந்தெடுத்தல் (Co-option) மற்றும் செயல் இயக்குனர்கள் (Functional Directors) பற்றியும் கூறப்பட்டுள்ளது. அதன்படி சங்க நிர்வாகக்குழுவின் உறுப்பினர்கள் மூன்று வகைப்படுத்தப்பட்டுள்ளனர்:

(1) தேர்தல் மூலம் (to be elected)

(2) இசைந்து தேர்வு செய்தல் (Co-option)

(3) செயல் இயக்குனர்கள் (Functional Directors)

தவிரவும் நிர்வாகிகள் தேர்வு குறித்த திருத்தப்பட்ட விதி எண் 53-ன் கீழும் பதவி வழித் தலைவர் தேர்வு பற்றி குறிப்பிடப்படவில்லை.

எனவே, குழுவிற்கான அமைப்பில் (Constitution of the Board) பதவி வழித் தலைவருக்கு சட்ட விதிகளில் வழிவகை செய்யப்படாத நிலையில் சட்ட விதிகளில் கண்டுள்ளபடி அனைத்து உறுப்பினர்களும் (7 முதல் 21 வரை) தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாகவே இருக்க வேண்டும் என்று அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

இதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப்பற்றி உடன் தெரிவித்திடக் கோரப்படுகிறது.

(ஒம்../-)ம.ரா. மோகன்

ஆணையர்.

பெறுநர்:

மாநிலத் தேர்தல் அலுவலர்கள்.